**செய்தி குறிப்பு எண்.010** **நாள்.20.2.2009**

# பத்திரிக்கை செய்தி

தமிழகத்தில் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் மருத்துவமனைகளில் காலியாகும் மருத்துவ அலுவலர் பணியிடங்கள் ஒவ்வொரு மாதமும் நேர்காணல் மற்றும் கலந்தாலோசனை அடிப்படையில் நிரப்பப்படுகின்றது. கடந்த மூன்று ஆண்டுகளில் 4156 மருத்துவ அலுவலர் பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன. இந்தியாவிலேயே 95% மருத்துவ அலுவலர் பணியிடங்கள் நிரப்பப்பட்ட முதல் மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது என உலக வங்கி குழுவினர் பாராட்டியுள்ளனர். நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் மாவட்டங்களைத் தவிர மற்ற மாவட்டங்களில் மருத்துவர் பணியிடங்கள் காலியில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் மாவட்டங்களில் அரசு மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் காலியாக உள்ள 93 மருத்துவர் பணியிடங்களை நிரப்ப வேலைவாய்ப்பு அலுவலகம் பரிந்துரை செய்துள்ள 100 நபர்களுக்கு 23.02.09 திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு, பொதுசுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து இயக்குநர் அலுவலகத்தில் கலந்தாய்வு நடைபெற உள்ளது. கலந்தாய்வில் தேர்வு செய்யப்படும் மருத்துவர்களுக்கு அன்று மாலையே நியமன ஆணைகள் வழங்கப்படும். தேர்ந்தெடுக்கப்படுவோர் மூன்று தினங்களில் பணியில் சேர வேண்டும்.

காலிப்பணியிடங்கள் மற்றும் வேலை வாய்ப்பு அலுவலகம் பரிந்துரை செய்துள்ளோரின் பெயர்கள் பற்றிய விவரங்களை www.tnhealth.org எனும் இணையதளத்தில் தெரிந்து கொள்ளலாம். வேலை வாய்ப்பு அலுவலகம் பரிந்துரை செய்துள்ளவர்களுக்கு, தபால் மூலம் அழைப்புக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. அழைப்புக் கடிதம் கிடைக்கப் பெறாதவர்கள் மேலே குறிப்பிட்டுள்ள இணைய தளத்தில் விவரங்களை தெரிந்து கொண்டு கலந்தாய்வில் கலந்து கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்
மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்

**********

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9